**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 99** **நாள். 11.08.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் நகர்புற வீடற்றோர் காப்பக பயனாளிகளின் உற்பத்தி பொருட்களின் விற்பனை துவக்கம்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் உத்திரவின்படி நகர்புற வீடற்றோர் காப்பக பயனாளிகளின் உற்பத்தி பொருட்கள் இன்று (11.08.2017) பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை வளாகத்தில் விற்பனை செய்யப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பாக தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியில் நகர்புற வீடற்றோர்க்கான காப்பகங்கள் 2013 முதல் செயல்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் ஏற்படுத்த வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி இதுவரை சென்னையில் 37 நகர்புற வீடற்றோர்களுக்கான காப்பகங்களும், 10 சிறப்பு காப்பகங்கள் மருத்துவமனைகளில் (ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, அரசு குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர் அரசு மகபேறு மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை, கே.எம்.சி. மருத்துவமனை) தற்போது செயல்பட்டு வருகிறது.

நகர்புற வீடற்றோர்க்கான காப்பகங்கள் மூலம் வீடற்ற ஆண்கள், பெண்கள், முதியோர்கள், குழந்தைகள், திருநங்கைகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான பாதுகாப்பான தங்குமிடம், உணவு, மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல், பிரிந்தவர்களை குடும்பத்தினரோடு சேர்த்து வைத்தல், பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல் (வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, முதியோர்ஓய்வூதியம் ) போன்ற வசதிகளும் செய்து தரப்படுகிறது. மேலும், அறிவுத்திறன் குறையுள்ள சிறார்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு காப்பகத்திலும் ஒரு ஒருங்கிணைப்பாளர் மற்றம் ஆற்றுபடுத்துனர் , சமையலர்/காப்பாளர் மற்றும் இரு காவலர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

காப்பகத்தில் தங்கி உள்ளவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்திடவும் , நிலையான வருமானத்தை உருவாக்கும் பொருட்டு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. நகரப்புற வீடற்றோர்க்கான காப்பகத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் திறன் வளர்ப்பு மேம்பாட்டு பயிற்சியின் மூலம் சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்தி அதன் மூலம் மறு வாழ்வு ஏற்படுத்தப்படுகிறது.

நகரப்புற வீடற்றோர்க்கான காப்பகத்தில் தங்கிவுள்ள பயனாளிகள் உற்பத்தி செய்த பொருட்களை பொது மக்களின் விற்பனைக்கு கொண்டுவருவதன் மூலம் பயனாளிகள் நிலையான வருமானம் ஈட்டிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடக்கமாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி நகர்புற வீடற்றோர் காப்பாக பயானாளிகள் உற்பத்தி செய்த பொருட்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது மக்களிடம் விற்பனை செய்யப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று காலை முதல் மாலை வரை நகரப்புற வீடற்றோர் காப்பக பயனாளிகளால் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனைக்கு தொடர்ந்து வைத்திட பல்வேறு ஆலோசனை மற்றும் அறிவுரைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் வழங்கினார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**